# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

புள்ளிவிபரத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கி

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு மற்றும் பணிகள் என்பனவற்றின் பெறுபேறுகள்

முக்கிய விடயங்கள்:

**தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிற்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் செத்தெம்பரில் விரிவடைந்தன.**

**தயாரிப்பு நடவடிக்கைகள்,** 2020 ஓகத்துடன் ஒப்பிடுகையில் **2020 செத்தெம்பரில் உயர்வான வீதமொன்றில் விரிவடைந்தன.** தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணின் இவ்விரிவடைதலுக்கு உற்பத்தி மற்றும் புதிய கட்டளைகள் விசேடமாக உணவு மற்றும் குடிபானம், புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் துறைகளின் தயாரிப்பில் அதிகரிப்புக்கள் பிரதான காரணமாக அமைந்தது.

தொழில் நடவடிக்கைகள் இயல்புநிலைமைக்கு திரும்பியதுடன் அதிகமான புதிய கட்டளைகளைப் பெற்று தமது தொழிற்சாலைகள் முழுமையான இயலளவில் இயங்கின என உணவு மற்றும் குடிபானங்கள், புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் துறைகளிலுள்ள சில பதிலிறுப்பாளர்கள் எடுத்துக் காட்டினர். மேலும் இவ்வபிவிருத்திகளுக்கு இசைவாக தொழில்நிலை துணைச் சுட்டெண் அதிகரித்தது.

மேலும், கொள்வனவுகளின் இருப்புத் துணைச் சுட்டெண் செத்தெம்பரில் மெதுவான வேகமொன்றில் அதிகரித்தது. நிரம்பலர் விநியோக நேரம் துணைச் சுட்டெண்ணானது நேரடி கப்பற்படுத்தல் பணிகளில் குறைபாடுகள் போன்ற ஏற்பாட்டுச் சேவைகள் சிக்கல்கள் காரணமாக உயர்வான வேகத்தில் தொடர்ந்தும் நீட்சியடைந்தது.

| மாறி | ஓகத் | செத் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **57.9** | **59.8** | **+** | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| | | | | <u>**கொ.மு.சுதுணைச்சுட்டெண்கள்**</u> |
| புதிய கட்டளைகள் | 58.5 | 61.7 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| உற்பத்தி | 57.5 | 63.3 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 54.0 | 51.6 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 57.5 | 56.9 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| நிரம்பலாளர்களின் விநியோக நேரம் | 62.5 | 63.3 | + | நீட்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி


மேலும், சில வகையான பொருட்களின் இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்டிருந்த தடைகள் தயாரிப்பு நடவடிக்கைகளின் சீரான தொழிற்பாட்டினைப் பாதித்தன என சில பதிலிறுப்பாளர்கள் எடுத்துக்காட்டியிருந்தனர்.

அடுத்துவரும் மூன்று மாதங்களுக்குமான தயாரித்தல் நடவடிக்கைகளுக்கான ஒட்டுமொத்த எதிர்பார்க்கைகள் துணைச் சுட்டெண், நாட்டில் குறிப்பாக சில தயாரித்தல் வலயங்களை மையப்படுத்தி நிலவிய கொவிட்-19 வைரஸ் பரவல் நிலைமையின் காரணமாக குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது.

**தயாரிப்பு கொ.மு.சு சுட்டெண் பெறுமதி**

**59.8**

2020 ஓகத்துடன் ஒப்பிடுகையில் 1.9 சுட்டெண் புள்ளிகள் கொண்ட அதிகரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலகத் தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு***

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சு 2020 ஓகத்திலிருந்து 0.5 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்புடன் 2020 செத்தெம்பரில் 52.3 இனைக் கொண்ட பெறுமதியொன்றினைப் பதிவுசெய்தது.

2020 செத்தெம்பரில் இந்தியா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய வலய நாடுகளின் தயாரிப்பு கொ.மு.சு உயர்வான வீதத்தில் தொடர்ந்தும் விரிவடைந்த அதேவேளை ரஷ்யாவின் தயாரித்தல் கொ.மு.சு, கொவிட்-19 இன் மோசமான தாக்கத்துடன் மாத காலப்பகுதியில் சுருக்கமடைந்தது.

*மூலம்: மார்க்கிட்[1], 2020 ஒத்தோபர் 15 இல் உள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங் காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**பணிகள் துறையானது முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2020 செத்தெம்பரில் 54.3 கொ.மு.சு பதிவுடன் தொடர்ச்சியாக நான்காவது மாதமாகவும் தொடர்ந்தும் விரிவடைந்தது.** பணிகள் துறை நடவடிக்கைகள் மேலும் மீட்சியடைவதனை எடுத்துக்காட்டி 2020 ஒகத்துடன் ஒப்பிடுகையில் புதிய வியாபாரங்கள், வியாபார நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் என்பவற்றில் அவதானிக்கப்பட்ட விரிவடைதல்கள் மூலம் இது துணையளிக்கப்பட்டிருந்தது.

பொருளாதார நடவடிக்கைகள் படிப்படியாக இயல்புநிலைக்கு திரும்பியதன் மூலம் புதிய வியாபாரங்கள், குறிப்பாக நிதியியல் பணிகள், காப்புறுதி துணைத் துறைகளிலுள்ளவை 2020 செத்தெம்பரில் மேம்பட்டன.

வியாபார நடவடிக்கைகளும் 2020 செத்தெம்பரில் குறைந்த வேகத்திலேனும் விரிவடைந்தன. நிதியியல் பணிகள் துணைத் துறையானது உலகளாவிய நோய்த்தொற்றின் மூலம் எதிர்மறையாகப் பாதிக்கப்பட்டிருந்த வியாபாரங்களுக்கு ஆதரவளிப்பதற்கு வழங்கப்பட்டிருந்த அதிகரித்த நிதியியல் வசதிகள் மூலம் இத்துறைக்கு முக்கிய பங்களிப்பாளராக இருந்தது. மேலும், செத்தெம்பர் 2020இல் அதிகமான மாற்றிக் கப்பற்படுத்தல்களை தாம் கையாளக்கூடியதாக இருந்தது என சரக்கு கையாளுதல் பணிகளில் உள்ள பதிலிறுப்பாளர்கள் குறித்துக்காட்டினர். மேலும் காப்புறுதி மற்றும் தொழில்சார் பணிகள் துணைத் துறைகளிலுள்ள தொடர்புடைய வியாபார நடவடிக்கைகளும் மாத காலப்பகுதியில் விரிவடைந்தன.

தொழில்நிலைச் சுட்டெண்ணானது கடந்த ஏழு மாதங்களாக தொழில்நிலையில் தொடர்ச்சியான வீழ்ச்சியின் பின்னர் 2020 செத்தெம்பரில் அநேகமாக 50-அடிப்படை அளவு மட்டத்தினை அடைந்திருந்தது.

கேள்வியில் ஏற்படும் ஏதேனும் அதிகரிப்பு ஏற்கனவேயுள்ள இயலளவினைக் கொண்டு நிறைவு செய்யப்படலாம் என்பதனை எடுத்துக்காட்டி நிலுவையிலுள்ள பணிகள் எதிர்மறையான எல்லையினுள் தொடர்ந்தும் காணப்பட்டது.

| மாறி | ஒகத் | செத் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **56.0** | **54.3** | **-** | **அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்** |
| | | **கொ.மு.சு துணைச் சுட்டெண்கள்** | | |
| புதிய வியாபாரங்கள் | 58.3 | 58.9 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| வியாபார நடவடிக்கை | 66.7 | 60.4 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 38.2 | 49.5 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 45.8 | 43.2 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 70.8 | 59.6 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி


அதேவேளை, ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் பொருளாதாரம் மீட்சி பெறுதல் மீது நிலவிய சாதகமான எண்ணப்பாங்குகளுடன் 2020 செத்தெம்பரில் எதிர்கால வியாபார நடவடிக்கைகள் மீதான எதிர்பார்க்கைகள் மேலும் அதிகரித்தன. எது எவ்வாறிருப்பினும் நாட்டில் கொவிட்-19 வைரஸ் பரவல் இடர்நேர்வு மீண்டும் தோன்றுகின்ற காரணமாக தமது எதிர்பார்க்கைகள் நிறைவேறுவது பற்றி சில பதிலிறுப்பாளர்கள் கவலை தெரிவித்தனர்.

**பணிகள் கொ.மு.சு சுட்டெண் பெறுமதி**

**54.3**

2020 ஒகத்துடன் ஒப்பிடுகையில் 1.7 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சி

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### உலகத் தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு

உலகளாவிய தயாரிப்பு கொ.மு. சுட்டெண்ணானது 2020 ஒகத்தில் 52.0 கொண்ட ஏழு மாத உயர்வில் இருந்து 2020 செத்தெம்பரில் 51.6 இற்கு வீழ்ச்சியடைந்து தொடர்ச்சியாக மூன்றாவது மாதத்திற்காகவும் உலகளாவிய பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதல் ஒன்றினை சமிக்ஞைப்படுத்துகிறது.

முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2020 செத்தெம்பரில் ஐக்கிய அமெரிக்கா, சீனா மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சு துறை விரிவடைந்துள்ளன என்பதனை அந்நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண் குறித்துக் காட்டிய அதேவேளை யப்பான் மற்றும் இந்தியா ஆகியவற்றின் சுட்டெண்கள் சீர்குலைதல் ஒன்றினை எடுத்துக்காட்டின.

*(மூலம்: மார்க்கிட்[1], ஒத்தோபர் 15, 2020 இல் உள்ளவாறு)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.

கொ.மு.சு>50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.

கொ.மு.சு<50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன. |